சமூகநீதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

**கடிதம் (நிலை) எண். 64 /சிஉ_தி-I/ 2026, நாள். 01.10.2026**

அனுப்புநர்
டாக்டர்.என். சுப்பையன், இஆப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (முகூபொ),
ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.

ஐயா,

பொருள்: அறிவிப்பு - சமூக நீதித் துறை – 2026-2027-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பாக்கம் மற்றும் வடகரை ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் நலப்பள்ளி வளாகங்களில் உள்ள பள்ளி கட்டடத்தை தேவையான அளவில் புதுப்பித்து பயிற்சி மையமாக மாற்றி பயிற்சி வழங்க அனுமதி - ஆணை வெளியிடுதல் -தொடர்பாக.

பார்வை: மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடிதம் எண்.2107/ PMU-III/2026, நாள் 28.09.2026.

*********

2026-2027ஆம் ஆண்டிற்கான துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

***ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை கலைத்திறனில் ஊக்குவிக்க "கலைப்பட்டறை" மூலம் நவீன கலைத் திறன் பயிற்சி வழங்கப்படும்.***

2. மேற்படி அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் தனது 28.09.2026 நாளிட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பாரம்பரிய மற்றும் நாட்டுப்புறக் கலைத் திறன்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு கலை மேலாண்மை, நிர்வாகம், அரசுத் திட்டங்களை அணுகுதல், குழு ஒருங்கிணைப்பு மற்றும் கலை நிகழ்வுகளை பொருளாதார ரீதியாக திட்டமிடுதல் போன்ற திறன்களை வழங்கும் வகையில் 2026–2027ஆம் நிதியாண்டில் கலைத்துறையில் ஆர்வமுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான மையங்கள் தொடங்குவதற்காக திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பாக்கம், வடகரை ஆகிய இரு இடங்களில் ஆதி திராவிடர்

நலப்பள்ளி வளாகங்களில் உள்ள கட்டடத்தை தேவையான அளவில் புதுப்பித்து பயிற்சி மையமாக மாற்ற தேவைப்படும் செலவினம் குறித்த விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

**பயிற்சி மையங்களின் செயல்பாடு**

- **காட்டுப்பாக்கம், வடகரை** ஆகிய இரு பள்ளி வளாகங்களிலும் உள்ள பொருத்தமான கட்டடங்கள் தேவையான அடிப்படை வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு பயிற்சி மையமாக பயன்படுத்தப்படும்.
- இப்பயிற்சி மையத்தில் ஆர்வமுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கப்படும்.

3. மேலும், திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பாக்கம், வடகரை ஆதிதிராவிடர் நலப்பள்ளி வளாகங்களில் உள்ள பள்ளி கட்டடத்தை தேவையான அளவில் புதுப்பித்து பயிற்சி மையங்களாக மாற்றுவதற்கான செலவினத் தொகை **ரூ.30,70,000/- (ரூபாய் முப்பது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)** என தாட்கோ மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேற்படி கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களை கலைத்திறனில் ஊக்குவிக்க "கலைப்பட்டறை" மூலம் நவீன கலைத்திறன் பயிற்சி வழங்கும் திட்டத்தினை திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பாக்கம் மற்றும் வடகரை ஆகிய இடங்களில் ஆதி திராவிடர் நலப்பள்ளி வளாகங்களில் உள்ள பள்ளி கட்டடத்தை தேவையான அளவில் புதுப்பித்து பயிற்சி மையமாக மாற்றி பயிற்சி வழங்க ஆதிதிராவிட நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஏ.சந்திரசேகர்
01/10/2026

அரசு செயலாளருக்காக

ஏ.ச
01/10/26

<u>நகல்</u>

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18.
மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
சமூக நீதித்துறை செயலாளரின் தனிச் செயலர்,
சென்னை-600 009.
சமூகநீதி (ஆதிந -5) த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.